# அத்தியாயம் – 14

## முழுமைத் திட்டத்தினை கண்காணித்தல் மற்றும் செயலாக்குதல்

**அ. பலன்களை முயன்று அடைதல்**

இரண்டாம் முழுமைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள வினைமுறைத்திறம் மூலம் அதன் பலன்களை அடைய ஒரு தெளிவான தொலைநோக்கு பார்வை சென்னைக்கான முழுமைத்திட்டத்தில் உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், அனைத்து தரப்பு மக்களும் செழிப்புற்று விளங்குகிற வகையில், நல்ல சொத்துக்களை எதிர்கால சந்ததியருக்கு கொடுக்கும் வகையில் வாழத்தகுந்த, நீடித்த, நிலையான மற்றும் பொருளாதாரத்தில் வலுவான ஒரு தலைசிறந்த நகரமாக சென்னையை ஆக்குவதேயாகும். இந்த முயறிசியில் வெற்றியடைய, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பலதரப்பட்ட குடிமக்கள் மற்றும் வகுப்பினர், அரசாங்கம், தனியார் மற்றும் அரசுசாரா பிரிவினர் போன்ற அதிக அளவிலான பங்களிப்பாளர்களுடன் இணைந்து செயலாற்றவேண்டும். எனவே, பலதரப்பட்ட பங்களிப்பாளர்களால் செயல்முறைப்படுதுவதற்காக கொள்கைகள், வினைமுறைத்திறம்கள் மற்றும் செயல்திட்டங்கள் ஆகியவற்றை முழுமைத்திட்டம் வகுத்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கிய பங்கு என்னவென்றால், முழுமைத்திட்ட காலத்தில் தகுந்த நேரத்தில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்தி, முழுமைத் திட்டத்தின் தொலை நோக்கு இலக்கு, குறிக்கோள் மற்றும் திட்டங்கள் இவற்றில், பங்களிப்பாளர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை காலஅளவுதோறும், மதிப்பாய்வு செய்வதேயாகும். இதற்காக, பங்களிப்பாளர்கள் தனியாகவோ மற்றும் மொத்தமாக ஒவ்வொரு துறையிலும் அடைந்த முன்னேற்றத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு அளக்கக்கூடிய குறியீடுகள் கண்டறியப்படவேண்டியது அவசியமாகிறது.

**ஆ. வாழ்வதற்குரிய குறியீடுகள் :**

**14. 2** வறுமை மற்றும் வேலையின்மையை சீர்செய்தல், குடிசைபகுதிகளை குறைத்தல், வாங்கத்தக்கமையில் வாழ்வதற்கேற்ற வீடுகளை வழங்குதல், சுற்றுச்சூழல் மாசுகளை தடுத்தல் மற்றும் குறைத்தல், ஆதார வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல் போன்றவை, நகர வாழ்க்கை தரம் மேம்பாடு அடைந்துள்ள நிலைகளை பிரதிபலிக்கும். மேலும் இவை ஒரு நகரம் அதனுடைய தொலை நோக்குஇலக்கை அடைய எப்படி வளர்கிறது என்பதையும் பிரதிபலிக்கும்.

**இ. நகரகுறியீடுகளின் பயன்கள்:**

**14 .3** ரியோ மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் 21 ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் வெற்றிகரமான வெளிப்பாட்டின் காரணமாக நகர குறியீடுகளின் பயன்கள் உலகளவில் பரவிவருகிறது. இதர நகரங்களோடு தங்களுடைய நகரத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக ஏற்கனவே பல நகரங்கள் வாழ்க்கைத்தரம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சியின் அளவு போன்றவற்றை மதிப்பிட குறியீட்டு முறையை உருவாக்கியுள்ளனர்.

**ஈ. சென்னைக்கான வளர்ச்சிக் குறியீடுகள்**

**14.4** பங்களிப்பாளர்கள் தேவையான தகவல்களை சீராக சேர்த்து எல்லோருக்கும் பயன்படும் வண்ணம் வழங்குவதற்கு தமக்கென சில குறியீடுகளை உருவாக்க ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் உத்தேசித்துள்ளது.

(அ) நகர மேம்பாட்டில் மக்களின் விழிப்புணர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும்
(ஆ) அடைந்த முன்னேற்றத்தை அளத்தல்.

**14. 5** மேலாண்மைக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி (நகர மேலாண்மைக்கான நகர குறியீடுகள் – திருவாளர்கள் மாத்யூ மற்றும் விக்டோரியா டீ வில்லா, ஆகஸ்ட் - 2001) 13 வகையான பிரிவுகளில் குறியீடுகளை தயாரிக்க உத்தேசித்துள்ளது. இவ்வாறு பல்வேறு நகரங்களுடன் கலந்தாய்வின் மூலம் தயாரிக்கப்பட்ட குறியீடுகள் சென்னையின் முன்னேற்றத்தை அளப்பதற்கு ஒரு அடிப்படை வரை சட்டத்தை அளிக்கிறது.

14. 6 குறியீடுகள் கீழ்கண்ட முக்கிய தலைப்புகளில் வகைப்படுத்தப்படும்

- மக்கள்தொகை, மக்கள் குடியேற்றம் மற்றும் நகரமயமாதல்
- வருமான ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை மற்றும் ஏழ்மை
- உடல் நலம் மற்றும் கல்வி
- நகர உற்பத்தித்திறன் மற்றும் ஆற்றல்திறன்
- தொழில்நுட்பம் மற்றும் இணைப்பு
- நகர நிலம்
- வீட்டு வசதி
- நகராட்சி பணி சேவைகள்
- நகரச்சுற்றுச்சூழல்
- நகரப் போக்குவரத்து
- கலாச்சாரம்
- உள்ளாட்சி அமைப்புகளின் நிதி மற்றும் முதலீடுகள்
- நகர ஆளுமை

**உ. குறியீடுகளை கண்டறிவதற்கான நுட்ப முறைகள்:**

14. 7 ஒவ்வொரு துறையிலும் குறிப்பிட்ட குறியீடுகளை முழுமைத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழு, அரசு மற்றும் அதனைச் சார்ந்த துறைகள் குறிப்பாக பெருநகர் குடிநீர் வாரியம், வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மாற்று வாரியங்கள், தொழில் மற்றும் தொழிலாளர் துறைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், தனியார் துறைகள் சார்ந்த தொழிலதிபர்கள், வீட்டுமனை அபிவிருத்தியாளர்கள், கட்டுமானத்துறையினர், சமூகத்தினர் மற்றும் பொதுமக்களில் பங்களிப்பாளர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து கண்டறியும்.

**ஊ. ஆய்வறிக்கைகள்:**

14. 8 ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் மறுப்புகள் ஆகியவற்றை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுக்களின் கலந்தாய்வு மற்றும் விவாதங்கள் பிரச்சினைகளை கையாள அணுகுமுறைகள் மற்றும் புலனுர்வை விரிவாக்கிறது. இந்த முழுமைத்திட்டத்தினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முழுமைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வினைமுறைதிறங்களை செம்மைப்படுத்த, உத்தேசிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மற்றும் மறுஆய்வு குழுக்கள் மூலம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

14. 9 மேலும், அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய தேவையான அடிப்படை விவரங்களை அளிக்கவும் மற்றும் பல்வேறு பிரிவுகளில் மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூடுதல் ஆய்வுகளை கண்காணிப்பு குழு கண்டறியும்.

14. 10 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் மேற்கொள்ளப்படும் மற்றும் / அல்லது துணைத்தந்து ஊக்கவிக்கப் படப்போகும் ஒரு சில ஆய்வுகள் அந்தந்த அத்தியாயத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கொள்கை தயாரித்தலை பலப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் போதாத / இல்லாத பகுதிகளில் இன்னும் பல ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இதற்காக அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், கல்வியாளர்கள், சென்னையிலுள்ள தரமான ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் முழுத்திறனையும் ஒன்று திரட்ட வேண்டும்.

14. 11 பரிந்துரைக்கப்பட்ட ஆய்வுகள் இணைப்பு – II ல் தரப்பட்டுள்ளது.

## எ. சென்னைப் பெருநகரின் வருங்கால முதலீடுகள்

**14. 12** சென்னைப் பெருநகரிலுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முன்னர் ரூபாய் 18,000 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித்திட்டம் ஒன்றை தயாரித்தது. இது தற்போது அந்தந்த துறைகளின் / நிறுவனங்களின் வரவு, செலவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2003 முதல் 4 ஆண்டுகளில் போக்குவரத்து, வீட்டுவசதி, நகராட்சி பணி சேவைகள், குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் போன்ற பிரிவுகளில் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக ரூபாய் 3,745 கோடி முதலீடுகள் செய்யப்பட்டுள்ளது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர புரைமைப்பு திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்காக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகருக்கான, மேம்பாட்டுத்திட்டங்கள் ரூபாய 44,780/- கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 7 ஆண்டுகளில் (2005 - 2007) செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் அந்தந்த துறை / நிறுவனங்களால் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டம் அல்லது இதர வழிமுறைகளில் நிதி உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்படும்.

இரண்டாம் முழுமைத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வினைமுறை திறம்களின் அடிப்படையில் திட்ட காலமான 2026-ஆம் ஆண்டு வரையிலான முதலீடு ஒவ்வொரு துறைக்கும் கணக்கிடப்படவேண்டும். அந்தந்த துறைக்கான திட்டங்களை திட்டமிடவும், செயல்படுத்தவும் தேவையான திட்டங்கள் வகுத்து செயல்படுத்தவேண்டும். பெருநகரத் திட்டக்குழு அமைக்கும் போது, அவற்றின் துணையோடு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இதர துறையினர் நீண்டகால முதலீடுகள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கவேண்டும். இலக்கினை அடைய இத்திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த, அரசாங்கம் எடுக்கும் முடிவின்படி, அமைக்கப்படும் குழு கண்காணிக்கும்.

## இணைப்பு – 1

பரிந்துரைக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மறுஆய்வு குழுக்களின் பட்டியல்

| | குழுவின் பெயர் | சேர்த்துக்கொள்ளப்பட்ட முக்கிய தலைப்புகள் |
|---|---|---|
| 1 | பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்புக் குழு | மாநில நகர அபிவிருத்தி கொள்கை, மக்கள்தொகை, பொருளாதாரம், வேலை வாய்ப்பு மற்றும் திறமை ஊக்குவிப்பு பயிற்சி |
| 2 | நில பயன்பாடு மற்றும் சுற்றுச் சூழல் குழு | நில உபயோக பயன்பாடு, வளர்ச்சி விதிமுறைகள், நகர வடிவமைப்பு, நகர் புனரமைப்பு, பாரம்பரியமிக்க கட்டிடங்களை பாதுகாத்தல், பொழுதுபோக்கு, சுற்றுக்சூழல், பசுமை, பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை. |
| 3 | போக்குவரவு மற்றும் போக்கு வரத்துக் குழு | போக்குவரத்து, சாலை மற்றும் இரயில் உள்ளடக்கிய போக்குவரவு, அதனைச் சார்ந்தவை. |
| 4 | உறைவிடம் மற்றும் உள் கட்டமைப்பு குழு | எல்லாத் தரப்பினருக்கும் வீட்டுவசதி, குடிநீர் வழங்கல், சுகாதாரம், வடிகால், திடக்கழிவு, மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, மின்சாரம், தொலைத்தொடர்பு, கல்வி மற்றும் இதர சமுதாய உள்கட்டமைப்பு. |
| 5 | திட்ட முதலீடு மற்றும் ஆளுமை குழு | முதலீட்டு திட்டம், ஆளுமை, பூகோளத் தகவல் தொகுப்பு மையம். |

## இணைப்பு II

பரிந்துரைக்கப்பட்ட ஆய்வுகள் பற்றிய பட்டியல்

1. (அ) வருமானம் மற்றும் முறைசார் மற்றும் முறை சாரா வேலைகள் - வருமானப் பகிர்வு
   (ஆ) முறைசாரா மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் நிலத் தேவைகள்
2. நகரின் வளர்ச்சி விகிதம் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு தேவையான முதலீடுகள்
3. ஆரம்ப உடல்நல கவனிப்பு மற்றும் நோய்களின் சம்பவிப்பு - மலேரியா மற்றும் நீர் / காற்று போன்றவற்றால் ஏற்படும் நோய்கள்.
4. பள்ளிச் சேர்க்கை மற்றும் தொழிற்கல்விக்கான பயிற்சி தேவைகள்.
5. வாங்குதமைக்கான வீடுகள் கட்ட கிடைக்கக் கூடிய நிலம்.
6. (அ) குடிசைப் பகுதிகளின் வளர்ச்சி, வீடு இல்லாத நிலை மற்றும் வீட்டு வசதி உற்பத்தி
   (ஆ) குடிசை மறுகுடியமர்வு பற்றிய மதிப்பீடு
7. (அ) குறைந்த வருவாய் குடும்பங்களுக்காக வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் அளவு மற்றும் தன்மை
   (ஆ) உள்ளூரில் நீர் ஆதாரங்களை பெருக்குவதற்கான நடைமுறை வசதிகள்
8. குடியிருப்புகளில் கழிவு நீரை வெறியேற்றும் முறைகளும் அதன் தாக்கமும்
9. (அ) திடக்கழிவு உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பின் அளவு
   (ஆ) அபாயகரமான மற்றும் மின்னணு கழிவு மேலாண்மை பற்றிய ஆய்வு
10. (அ) ஆறுகளின் நீர்த் தன்மை – கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் கோயில் குளங்கள்
    (ஆ) காற்றின் தன்மையை கண்காணிப்பதற்கான ஆய்வு
11. (அ) வகை பகுப்பு மற்றும் பயண நேர ஆய்வு
    (ஆ) நடை மற்றும் மிதிவண்டி வசதிகளை அதிகமாக்குதல்
12. நகர உள்ளாட்சி நிறுவனங்களில் குடிமக்கள் பங்கேற்பு வாய்ப்புகள் மற்றும் நிலைகள்
13. உள்கட்டமைப்பில் பொது மக்களின் முதலீடும், அதன் வெளிப்பாடும்.
14. நகர எல்லைகளின் ஒழுங்கற்ற விரிவாக்கத்தின் பரப்பு மற்றும் நில உபயோகத்தை கடைபிடிக்காத தன்மை
15. பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் – பசுமைப்பகுதிகளின் பட்டியலும் பராமரிப்பும்.
16. அனுமதி பெறாத கட்டிடங்கள் மற்றும் திட்ட விதிமுறைகளை மீறிய கட்டிடங்கள்
17. கீழ்கண்டவற்றிற்காக ஒரே மாதிரியான பரப்பு வளர்ச்சி திட்டங்களை உருவாக்குவதற்கான ஆய்வுகள்.
    (அ) நகரப் பகுதிகள்
    (ஆ) நகராட்சி வார்டுகள்
    (இ) புறநகர்ப் பகுதிகள்
18. நகர நில மதிப்புகள் பற்றிய ஆய்வுகளை தொகுத்தல்
19. வீட்டு வசதிக்காக அரசாங்கத்தால் செய்யப்படும் முதலீடுகள்
20. சிறு தொழில்கள் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதிக்காக வங்கி மற்றும் நிதிநிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிதியுதவி.